**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

**O.S. No. 174 of 2022**

Deposition of **P.W. 2**

Name of the Witness: திரு.மாணிக்கம்

Date **: 02.03.2024**

***குறுக்கு விசாரணை***

எனது சொந்த ஊர் கந்தன்கொட்டாய். தாவா சொத்து இருக்கும் அக்கமனஅள்ளிக்கும், என்னுடைய ஊரான கந்தன்கொட்டாய்க்கும் 3 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். என்னுடைய மகளை 2ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். என் அண்ணன் துரையின் மகளை வாதிக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகி பதிலுரை போடவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே பாகம் ஆகிவிட்டதால் தான் 2ம் பிரதிவாதி இந்த வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு மூக்கனூர் ஆதிமூலகோவில் மானிய நிலத்தை பங்கு கொடுத்து விட்டது என்றாலும், அந்த நிலத்தை அவர் அனுபவித்து வருகிறார் என்றால், அந்த நிலத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியாது. ஆனால் இடம் தெரியும். 2ம் பிரதிவாதி அனுபவித்து வரும் கோவில் நிலத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியாது. எனக்கு வழக்கு சொத்துக்களை பற்றி தெரியும் என்று நான் சொல்லியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் செக்குபந்தி எனக்கு

தெரியாது. இடையில் நான் தாவா சொத்தை சமீபத்தில் பார்க்கவில்லை. சின்னராமன் என்பவரிடமிருந்து தாவா சொத்து கிரையம் செய்யும் போது நான் போகவில்லை. அந்த கிரைய பத்திரம் எப்போது ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 27 வருடத்திற்கு முன்பாக நான் தாவா சொத்தை வாங்கியிருப்பதாக சொல்லியிருப்பது சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாதியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்பதால் தான் வீடு அவர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நடுப்பட்டியில் உள்ள சொத்தை 30 வருடத்திற்கு முன்பாக பிரிக்கப்பட்டு விட்டது. நடுப்பட்டியில் பாகமாக வந்த சொத்தை விற்று தான் வாதி 1ம் பிரதிவாதியின் சொத்தை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

2) வாதி முருகன் பெயரில் 6 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு அவர் பெயரில் பட்டா,. சிட்டா உள்ளது என்றால் சரிதான். 20 வருடத்திற்கு முன்பாக பாகம் பிரிக்கப்பட்டு விட்டது என்றாலும். அவர் அவர்கள் பாகத்தை தனி தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் கிணற்றில் மின் இணைப்பு 1ம் பிரதிவாதியின் பெயரில் இருப்பதால் தான் பிரச்சனை என்றால் சரியல்ல. மின் இணைப்பை வாதி பெயரில் மாற்ற வேண்டும் வாதி பிரச்சனை செய்ததால் 1ம் பிரதிவாதி வ எஸ்பியிடம் புகார் கொடுத்து அதன் பேரில் என்னையும் வாதியையும் விசாரித்தார்கள் என்றாலும், நாங்கள் இனிமேல் பிரச்சனை

செய்யமாட்டோம் என்று எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். ஆனால் எல்லாமே பொது குடும்ப சொத்து தான். வாதி, பிரதிவாதிக்குள் 20 வருடத்திற்கு முன்பு பாகம் பிரிக்கப்பட்டு விட்டது என்றும், பாகம் ஏற்படவில்லை என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 20 வருடத்திற்கு முன்பாக பாகம் பிரிக்கப்பட்டு விட்டது என்றும் தற்போது 1ம்பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த பாகத்தை வாதி தனக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. வாதியின் மனைவி பெயர் சுமதி என்றால் சரிதான். வாதி வெளிநாட்டில் இருப்பதால் அவருடைய மனைவி சுமதி சொத்தை பாகம் பிரிக்கவேண்டும் என்று தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 125/2011 வழக்கு போட்டார் என்றால்அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு போடும் போதே எனக்கு எல்லா விவரமும் தெரியும் என்றாலும்,தற்போது வாதிக்காக எதுவும் தெரியாது என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மை நிலையை மறைத்து பொய் சாட்சி அளிப்பதால் என்னுடைய சாட்சியத்தை ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல.